# KINDERGARTEN ROOM

(Nursery Rhymes and Jingles, Kindergarten Games, Action, Marching, Kollattam and Kummi songs and Riddles.)

TAMIL - BY


**Rao Bahadur M.C. RAJAH, M.L.A., F.M.U.**

Formerly Superintendent, Wesley College Lower School

AND

**Sreemathi R. RANGANAYAKI AMMAL**

Hony. Superintendent, A.D.C . School, Madras


# மழலையர் பாடல்கள்


எம் சி ராஜா

மற்றும்

ரங்கநாயகி அம்மையார்



மூன்றாம் பதிப்பு 1930





மறு வெளியீடு

**தமிழ் மரபு அறக்கட்டளை**

ஜெர்மனி

**2017**

**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

மாபெரும் ஆளுமை

# மயிலை சின்னதம்பி ராஜா

ஓர் அறிமுகம்

**- கௌதம சன்னா-**

**எம்.சி.ராஜா** (07.06.1885 – 20.08.1945) என்று அழைக்கப்பட்ட மயிலை சின்னத் தம்பி ராஜா அவர்களின் பெயர் ஒரு காலத்தில் இந்திய ஒடுக்கப்பட்ட மக்களின் மந்திரச் சொல்லாக இருந்தது. குமரி முதல் டில்லி வரை அவரது புகழ் பரவி இருந்தது. ஆனால் கெடுவாய்ப்பாக வரலாற்றின் ஏடுகளிலிருந்து அவரது பெயர் மங்கிப்போகும் அளவிற்கு ஓர் இருட்டடிப்பு நடந்தது ஏன் என்பதை ஆய்விற்கு உட்படுத்த வேண்டிய காலமிது.



எம்.சி.ராஜா அவர்கள் இந்தியாவில் நன்கு அறியப்பட்ட, சமுகப் புரட்சியை முன்னெடுத்த தலைவர் என்று ஏற்றுக்கொள்வதற்கு பழையத் தலைமுறைக்கும், அதனை பின்தொடர மறுக்கும் இன்றைய தலைமுறைக்கும்கூடத் தயக்கம் இருக்கலாம். ஏனெனில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் மட்டுமே பெரும்பாலும் அறியப்பட்டுள்ள நிலையில், அவருக்கு முன்னர் அரசியல் பணிகளைத் தொடங்கி, பின்னர் அவரோடு சமகாலத் தலைவராய் அறியப்பட்டதால் இந்த குழப்பமான வரலாற்று மயக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. அதைத் தீர்க்கும் விதமாக கிடைத்துள்ளச் சான்றுகளில் ஒன்றை இங்கே தருகிறேன்..

தலைவர் எம்.சி.ராஜா அவர்களைப் பற்றி **Pioneer Allahabad** என்ற இதழ் 12.02.1930 அன்று பின்வருமாறு எழுதியது :

> ‘எம்.சி.ராஜா அவர்கள் தாழ்வு மனப்பான்மையின் எதிரி.. சமூதாயப் புரட்சியாளர்.. அவர் தம் இனத்தைக் காப்பற்ற வந்த வீரர். தாழ்த்தப்பட்டோரின் தலைசிறந்த வழிக்காட்டி. அழுத்தப்பட்ட தம் மக்களுக்காக அயராது போராடியவர். தடுமாறும் சமுதாயத்தின் ஒப்பற்ற நண்பர். தாழ்த்தப்பட்ட மக்களை விழிப்புற வைத்த முதன்மையானத் தலைவர்’’

அலகாபாத்தில் வெளியிடப்பட்ட செய்திகள் மட்டுமல்ல இப்படி பலவிதமானச் செய்திகள் அக்கால இதழ்களில் ஏராளமாக விரவிக் கிடக்கின்றன. ஆய்வாளர்களின் பார்வைக்குக் காத்துக் கிடக்கின்றன.

1858ஆம் ஆண்டு நடந்த புரட்சியில் பங்கேற்ற மயிலை சின்னத்தம்பி அவர்கள், 1887இல் உருவாக்கப்பட்ட ஆதிதிராவிடர் மகாஜன சபையின் செயலாளராக இருந்தவர். இந்த முன்னோடித் தலைவரின் மகனாக பிறந்ததினால் தானோ என்னவோ ராஜா அவர்கள் தம் தந்தையை மிஞ்சினத் தலைவராக, அகில இந்தியாவும் போற்றும் தலைவராக உயர்ந்தார். தம் கடின உழைப்பால் நிலைத்தார்.



எனினும் கிடைத்தச் சான்றுகளை ஒருக்கிணைத்துப் பார்க்கும் போது தமது முப்பதாவது வயதிற்குள்ளாகவே தென்னகம் முழுதும் அறியப்பட்டத் தலைவராக ராஜா அவர்கள் விளங்கினார். 1916 முதல் அவரது அரசியல் முயற்சிகள் மிகுந்த முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருந்தன. ஏனெனில் மாபெரும் தலைவராக இருந்த அயோத்திதாசப் பண்டிதர் 1914ல் மறைந்துவிட்டிருந்தார். மற்றொரு மாபெரும் தலைவரான ரெட்டமலை சீனிவாசம் அவர்கள் இன்னும் தென்னாப்பிரிக்காவிலேயே இருந்தார். எனவே அந்த இடைவெளியை சமூக அரசியல் பாரம்பரியம் மிக்க குடும்பத்திலிருந்து வந்த ராஜா அவர்கள் நிரப்பினார் என்றால் அது மிகையாகாது.

ராஜா அவர்கள் 1916ல் ஆதிதிராவிடர் மகாசன சபைக்குத் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்த 1917ல் மாண்டேகு செம்ஸ்போர்டு அரசமைப்புக் குழுவிடம் ஒடுக்ககப்பட்டோருக்கான உரிமைகளை வலியுறுத்தி ஒரு மனுவை அளித்து அனைவரது கவனத்தையும் கவர்ந்தார். அதனால் தொடர்ந்து வந்த அனைத்து அரசியல் மாற்றங்களிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக, அவர்களின் குரலை ஒலிக்கும் தலைவராக தவிர்க்க

முடியாத சக்தியாக உருவெடுத்தார். அதன்பலனாக 1919 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சென்னை மாகாணச் சட்டசபையின் மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் தீண்டத்தகாத மக்களின் தலைவராக சட்டசபையில் அடியெடுத்து வைத்த முதல் தலைவர் ராஜா அவர்கள்தான், அதுவுமின்றி நீதிகட்சியின் சார்பில் அமைக்கப்பட்ட முதல் அமைச்சரவையில் பங்கேற்ற தீண்டத்தகாத சமூகத்தின் முதல் தலைவரும் ராஜா அவர்கள்தான். இந்தப் பொறுப்புகளில் நின்று அவர் ஆற்றியச் சாதனைகளை பட்டியலிட்டால் அவர் எவ்வளவு தூரம் முன்னோடியாக இருந்திருக்கிறார் என்பது விளங்கும்.

தொடர்ந்து வந்த ஆண்டுகளில் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சம்மேளனம் அமைக்கப்பட்டதுடன் அதன் முதல் செயலாளராகவும் ராஜா அவர்கள் விளங்கினார். அதனால் நாடு முழவதும் பயணம் செய்து ஒடுக்கப்பட்ட தீண்டத்தகாத மக்களை அரசியல் படுத்தி அவர்களை அமைப்பாக்கினார். அவரின் பணி பெருகியக் காரணத்தினால் 1930ல் மையச் சட்டசபையான நாடாளுமன்றத்தில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். எனவே நாடாளுமன்றத்தில் அடியெடுத்து வைத்த ஒடுக்கப்பட்ட மக்களின் முதல் தலைவர் மட்டுமல்ல 1934ல் தற்காலிக சபா நாயகராக இருந்தவரும் ராஜா அவர்கள்தான். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது தீண்டாமைத் தொடர்பான மசோதா ஒன்றினை 1933ல் கொண்டு வந்தார். ஆனால் ஏற்றுக் கொள்ளப்படாமல் போனது என்பது அவரின் கால சாதி இறுக்கத்தை அப்பட்டமாக படம் பிடித்துக் காட்டுகிறது. இப்படி விரிவான தளத்தில் தமது பணிகளை முன்னெடுத்தக் காரணத்தினால் நாடு முழுதும் அறியப்பட்டத் தலைவராக அவர் விளங்கியது மட்டுமின்றி அவரது காலத்தில், பரந்த அடித்தளத்தைக் கொண்டிருந்த காங்கிரஸ் மற்றும் இசுலாமியக் கட்சிகளுக்கு இணையாக தம்முடைய அரசியல் பயணத்தை அவர் கட்டமைத்திருந்தார்.

ஆனால், வரலாறு அப்படியே போகவில்லை. அவர் முரண்பட வேண்டியக் காலத்தையும் அவருக்கு அளித்தது. 1930 ஆண்டு தொடங்கிய வட்ட மேசை மாநாடுகளில் கலந்துக் கொள்வதற்கான வாய்ப்பு அவருக்கு கிட்டாமல் போனது. ராஜா அவர்களை விட இளையவரான டாக்டர்.அம்பேத்கருக்கும், மூத்தவரான ரெட்டமலை சீனிவாசம் அவர்களுக்கும் கிட்டியது. இது ராஜா அவர்களின் மனதில் பெரும் ஏமாற்றத்தை உண்டாக்கியது. இதனால் அம்பேத்கர் அவர்களுடன் முரண்பட்டார். முரண்காட்சி என்னவென்றால் மாநாடு தொடங்கும் வரை தனிவாக்காளர் தொகுதி பற்றினக் கோரிக்கையை ராஜா அவர்கள் முன்வைத்துக்கொண்டிருந்தார்.

ஆனால் அம்பேத்கர் அதில் உடன்பாடு கொள்ளமலிருந்தார். ஆனால் அரசியல் போக்கின் தீவிரத்தை உணர்ந்த அம்பேத்கர் தனிவாக்காளர் தொகுதி கோரிக்கையில் தேவைப்பட்ட மாறுதல்களை கொண்டுவந்து ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கையாக மாற்றினார். ஆனால் அதுவரை இக்கோட்பாடுகளை வலியுறுத்தி வந்த ராஜா அவர்கள் தாம் ஆதரித்த கருத்தை மாற்றிக்கொண்டு, எதிர்க்கத் தொடங்கிவிட்டார். இதனால் தாழ்த்தப்பட்டோருக்கான அரசியல் களம் கடுமையாக சூடுபிடித்தது. மாபெரும் இரண்டுத் தலைவர்களின் மோதலாக அது உருவெடுத்தது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி பார்ப்பனீயச் சக்திகள் மோதலைக் கூர்மைப்படுத்தி, இருவருக்கும் இடையிலான இடைவெளியினைப் பெரிது படுத்தினார்கள். பத்திரிக்கைகளுக்கு மட்டுமல்ல அரசியல் களத்திற்கும் அன்றைக்கு நல்ல தீனியாக இருந்தது.

இரண்டாம் வட்ட மேசை மாநாடு முடிந்த பிறகு, இரட்டை வாக்குரிமை அம்பேத்கராலும் அவருக்குத் துணையாக இருந்த ரெட்டமலை சீனிவாசம் அவர்களாலும் பெறப்பட்டப் பிறகு, அதை ஒழிப்பதற்கு காந்தி மேற்கொண்ட முயற்சிகளால் நாடே வன்முறைச் சூழலில் சிக்கித் தவித்தது. தாழ்த்தப்பட்டோர் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதனால் உருவானதுதான் பூனா ஒப்பந்தம் என்று எல்லோருக்கும் தெரியும். இரட்டை வாக்குரிமையை கைவிட அம்பேத்கர் மறுத்தக் காரணத்தினால் ஒட்டுமொத்த இந்தியாவின் பார்வை மட்டுமல்ல, ஐரோப்பாவின் பார்வையும் அவர் மீது விழுந்தது. அம்பேத்கர் எடுக்கப்போகும் முடிவுதான் இந்தியாவின் தலையெழுத்தையே தீர்மானிக்கும் என்பதால் உலகம் அவரையே உற்று நோக்கியது. அம்பேத்கர் முடிவெடுத்தார். பூனா ஒப்பந்தம் உருவானது.

இந்நேரத்தில் எழுந்த கொந்தளிப்புகளில் கடும் மனஉளைச்சலில் ராஜா அவர்கள் இருந்தார். காங்கிரசாலும் பார்ப்பனீயச் சக்திகளாலும் தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தவராய் தனிமைப்படுத்தப் பட்டிருந்தார். அவரது கோட்பாடுகளுக்கு எதிராக அவரே நின்ற கோலம்தான் அவரை மிகவும் தாக்கியிருக்க வேண்டும். அவரது அமைதி அவருக்கு வரலாற்றில் ஒரு மோசமான பாத்திரத்தை அளிக்கும் என்று அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார். தன்னுடைய சொந்த முயற்சியினால் அகில இந்தியாவிலும் இருக்கும் தீண்டத்தகாத மக்களுக்கு அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று அவர் விரும்பியது நிறைவேறாமல் போனது அவருக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தாலும். விரைவிலேயே தம்மை அவர் மாற்றிக்கொண்டார். ஆனால் இந்த முரண்பாடு நிறைந்த அந்தக் காலத்தில் ராஜா அவர்கள் டாக்டர். அம்பேத்கருடன்

முரண்பட்டக் காரணத்தினால் வரலாற்றிலிருந்தே புறக்கணிக்கப்படும் அளவிற்கு அவர் மறக்கடிக்கப்பட்டார். உண்மையில் இந்த மறக்கடிப்பும் இருட்டடிப்பும் அந்த மாபெரும் தலைவருக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுக் குற்றம்.

ஏனெனில், ராஜா அவர்கள் அம்பேத்கரோடு நீண்டகாலம் முரண்படவில்லை, விரைவிலேயே இருவரும் சந்தித்து, மனம்விட்ட பேசி தமது கருத்து வேற்றுமைகளைச் சரி செய்துக் கொண்டார்கள். அதன் பயனாக இருவரும் இணைந்து பல்வேறு பணிகளை முன்னெடுத்தனர். அந்த நேரத்தில் இரண்டாம் உலகப்போர் வந்து மிளிர்ந்தத் தலைவர்கள் எல்லோரையும் மங்கச் செய்து விட்டது. அதில் ராஜாவும் மங்கித்தான் போனாரென்றாலும், தன்னுடைய மறைவு வரை அம்பேத்கரோடு இணைந்து பணியாற்றினார் என்பதற்கு அம்பேத்கரின் எழுத்துக்களும் பேச்சுக்களுமே சாட்சி. 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28ஆம் நாள் எம்.சி.ராஜா என்ற மாபெரும் விடுதலைத் தலைவர் மறைந்த பிறகு..தலித் வரலாற்றுக் களம் அவரை மறந்துவிடவில்லை. தொடர்ந்தது என்பதே உண்மை. ஆனால் அவரை நினைவுக் கூர்வது வீச்சாக நடைபெறவில்லை, மாறாக, அம்பேத்கரின் தத்துவத்தால் உத்வேகம் பெற்ற இயக்கங்களின் எழுச்சியினால் மங்கிப் போனது என்பதே உண்மை.

ராஜா அவர்களைப் பற்றின இந்த அறிமுகம் மிகச்சிறியது என்பதை நாம் குற்ற உணர்வோடு ஒத்துக் கொள்கிறேன். எனவே அவர் விரிவாக வெளிக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதை இங்கே அழுத்தமாக வலியுறுத்துகிறேன். அவர் மேற்கொண்டப் பணிகளை விரிவாக மதிப்பிடக்கூடியத் தளம் இதுவல்ல என்றக் காரணத்தினால் இதாடு நிறுத்திக் கொண்டு, இந்த நூல் கையாளும் உள்ளடக்கத்தினைப் பற்றியும் அதன் வரலாற்று பாத்திரத்தைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன்.

ராஜா அவர்கள் களத்ததிலே இறங்கி மக்களை அணிதிரட்டிய தலைவரும் போராளியும் மட்டுமல்ல, அவர் சிறந்த கல்வியாளர். கற்றறிந்த அறிஞர், எழுத்தாளர், கவிஞர் என பன்முக ஆற்றல் பெற்றவர். சென்னை ராயப்பேட்டையிலுள்ள வெஸ்லியன் மிஷன் பள்ளிக்கு கண்காணிப்பாளராக இருந்தார். பின்பு சென்னை கிறித்தவ கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றினார் என்பதெல்லாம் அவர் சிறந்த கல்வியாளர் என்பதை காட்டும் சான்றுகளாகும்.

1997ல், தலித் சமூக அரசியல் வரலாற்றைப் பற்றி நான் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தபோது, அறிஞர் அன்பு பொன்னோவியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்திப்பது வழக்கம். அப்படியான ஒரு சந்திப்பில் அவர் என்னிடம் பகிர்ந்துக் கொண்ட செய்தியில் 'எம்.சி.ராஜா பல பள்ளிக்கூடப் புத்தகங்களை எழுதியிருக்கிறார்' என்று சொன்னார். ஆனால் அப்போது அந்த நூல்கள் பற்றி குறிப்பாக எதையும் அவர் சொல்லவில்லை. ஆனால், 1962ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளிவந்த அறவுரை எனும் மாத இதழில் அவற்றைப் பற்றினக் குறிப்பை பொன்னேவியம் அவர்கள் எழுதியிருக்கிறார்.

> **'ராஜா அவர்கள் பல பள்ளிப் புத்தகங்களின் ஆசிரியராவார். சமூதாயத்தையொட்டி அவர் எழுதிய 'ஒடுக்கப்பட்ட இந்துக்கள்' என்ற நூல் ஒடுக்கப்பட்ட மக்களுக்கோர் வழிக்காட்டியாக அமைந்தது என்றால் மிகையாகாது. நம்மை பீடித்தக் கெட்ட வேளையால் அவர் எழுதியக் கவிதைகள் நமக்குக் கிடைக்கவில்லை என்றாலும், அவர் ஒரு கவிதா உள்ளம் படைத்தவர் என்பதை அவரது வரலாற்றிலிருந்து அறிகிறோம்''

பொன்னோவியம் அவர்களின் இந்தக் குறிப்பு ஒர் ஒளியை ராஜா அவர்களை ஆய்வு செய்ய விரும்புவோருக்கு வழங்கும். அந்த அடிப்படையில்தான் **Kinder Garden Room** என்ற தலைப்பிடப்பட்டு, எம்.சி.ராஜா அவர்களாலும் ஆர்.ரங்கநாயகி அம்மாள் அவர்களாலும் இணைந்து உருவாக்கப்பட்ட இந்த மழலையர் பள்ளிப் பாடநூலின் நம்பகத் தன்மையை உணர்ந்துக்கொள்ள முடிகிறது. எனவே, இனி, இந்த நூலின் கவிதைகளில் உள்ள சில அம்சங்களைப் பார்ப்போம்.

முதலில் இந்தக் கவிதைகளைப் படித்தவுடன் எனக்கு உருவான மனவெழுச்சியை என்னவென்று சொல்வது. விவரிக்க முடியாத மகிழ்ச்சி என் உள்ளத்தை ஆட்கொண்டது. ஏனெனில் இதிலுள்ள பல பாடல்கள் நான் சிறுவனாக இருந்தபோது நானும் என்னையொத்தவர்களாலும் பாடப்பட்ட பாடல்கள். எங்களுக்கு எப்படி அந்த பாடல்கள் கிடைத்தனவென்றால் எங்களுக்கு முன்பிருந்த தலைமுறை எங்களுக்குச் சொல்லித் தந்தவை. அப்படி வழிவழியாக வந்தப் பாடல்கள் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவை மாபெரும் தலைவர் எம்.சி.ராஜா அவர்கள் வழங்கியப் பாடல்கள் என்று நினைக்கும்போது உள்ளம் உவகைக் கொள்கிறது.

இதில் சிறப்பு என்னவென்றால். மிக முக்கியமாக இரண்டுப் பாடல்கள் ஒரு குழந்தையாய் பேசத் தொடங்குவதற்கு முன்பே சொல்லித் தரப்பட்டப் பாடல்கள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. குறிப்பாக ‘கை வீசாம்மா கைவீசு’ (பாடல் .1), ‘சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு’ (பாடல் .6) ‘அகத்திக்கீரைப் புண்ணாக்கு’(பாடல் .19) அதிலே கொஞ்சம் நெய்வாறு’ ஆகியப் பாடல்கள். இந்த பாடல்கள் குழந்தைகளை எளிய பயிற்சிகளை செய்யத் தூண்டுபவை மட்டுமின்றி, மறக்க இயலாதப் பாடல்களும்கூட. இன்றும்கூட தாய்மார்களால் தம்முடைய குழந்தைகளுக்கு வழியவழியாய் கற்றுக் கொடுக்கப்பட்டுவரும் பாடல்களாக பரிணமித்துள்ளவை. அதற்கு காரணம் என்வென்றால் அப்பாடல்களில் உள்ள எளிமையும் இசைநயமும்தான்.

நூலில் உள்ள பாடல்கள் பல இன்றளவும் நகர்புறச் சேரிப்பகுதிகளிலும் கிராமங்களின் அனைத்துப் பிரிவு மக்களிடையேயும் புழக்கத்தில் இருக்கும் பாடல்கள். அதுவுமின்றி இன்றைய பாட நூல்களில் சிறிய பெரிய மாற்றங்களுடன் நிலைத்துவிட்டவையும் இருக்கின்றன. குறிப்பாக சிலவற்றைப் பட்டியலிடலாம்..

‘நிலா நிலா ஓடிவா ! (பாடல்.2),

காக்கா கண்ணுக்கு மை கொண்டு வா ! (பாடல்.20)

ஆகியப் படல்களை இன்றும் பாட நூல்களில் நாம் பார்க்க முடியும்.

சின்ன சின்ன கை (பாடல்.3),
உங்கம்மா என்னென்ன கேட்டாள் (பாடல்.8),
ஏழாங்காய் ஆட்டம் (பாடல்.10),
ஒரு புட்டம் திருப்புட்டம் (பாடல்.12),
பூ, பூ புளியாம்பூ (பாடல்.13)
நீ எங்கே போனாய் (பாடல்.14),
புல்லே புல்லே ஏன் மறைந்தாய் (பாடல்.22),

காக்கா காக்கா எங்கே போனாய் (பாடல்.23), சொட சொடாப் பழம் (பாடல்.28)’’ ஆகியப் பாடல்களை இன்றளவும் குழந்தைளிடம் கேட்க முடியும். அவர்கள் விளையாடும் இடத்திற்குப் போனால் கூட்டிசைப் பாடல்களாய் அவை பாடப்படுவதை நீங்கள் அறிந்துக் கொள்ள முடியும்.

சில பாடல்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவை, ஒரு முறை படித்தால் உடனே மனதில் பதிய கூடிய அளவிற்கு ஆற்றல் வாய்ந்தவை. ஞாபகத்திறனை சோதித்து அறிய விரும்புகிறவர்களுக்கு அவற்றை பரிந்துரைக்க விரும்புகிறேன். குறிப்பாக.

‘பனை மரமே ! பனை மரமே! (பாடல்.26),

தம்பி ! என்ன செய்தாய் (பாடல்.27),

ஈ – ஓ கொழுத்தக் கன்றே ! என் பேரைச் சொல்லு ?(பாடல்.29)’’ இந்தப் பாடல்கள் மிகுந்த இசை நயம் வாய்த்தவை மட்டுமல்ல, தொட்டுத் தொடர வைக்கும் எளிமை நிறைந்தவை, அதனால் சட்டென மனதில் பதிந்துவிடுகின்றன. குழந்தைகள் சிலர் இந்த பாடல்களின் உள்ளடக்கத்தை மாற்றி, ஆனால் அதே ஓசை நயத்துடன் பாடுவதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். இப்போதும்கூட..!

சில பாடல்கள் திரை இசைக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன, குறிப்பாக – ‘ஆராரோ ஆரிரரோ ! ஆராரோ ஆரிரரோ ! முத்தே பவழமே, முக்கனியே சர்க்கரையே! (பாடல்.21)’’ என்ற தாலாட்டு பாடல் இளையராஜா அவர்களின் இசையில் பாடலின் சில பல்லவிகள் பாடப்பட்டுள்ளன, அதுவுமின்றி

‘அரச மரத்துக் கிளி.. புன்னை மரத்துக் கிளி என்ற (பாடல்.24),’’பாடலும் திரை இசையில் பயன்படுத்தப்பட்ட பாடல்தான். எனவே எம்.சி.ராஜா அவர்களுக்கு இசையில் நல்ல பரிச்சம் இருந்திருக்க வேண்டும் என்றுத் தெரிகிறது. நூலின் இறுதியில் வரும் பல பாடல்கள் எப்படி பாடப்பட வேண்டும் என்பதற்கு உதவியாக தமிழிசை ராகங்களை உடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

இப்படி இந்த நூலின் சிறப்பைப் பற்றி விரிவாக பேசுவதற்கு மனம் விரும்பினாலும், வாசகர்களை ஒரு குழந்தை அனுபவத்தோடு படியுங்கள். ஒரு மாபெரும் அரசியல் தலைவர் குழந்தைகளுக்கான நூலினைப் படைக்கும்போது எவ்வளவு கவனத்துடன் இருந்திருக்கிறார் என்பது புரியும். அவரது மேதமையும் விளங்கும். இந்த நூல் மிகச்சிறியதுதான், தலித் குழந்தைகளுக்கு மட்டும் என்ற குறுகிய நோக்கத்திலன்றி ஒட்டுமொத்த குழந்தைகளை நோக்கி எழுதப்பட்டது என்பதை கூடுதலாக வலியுறுத்த விரும்புகிறேன்.

இறுதியாக இந்த நூலின் சிறப்பைப் பற்றி சொல்வதெனில்.. குழந்தையின் கல்வி என்பது இயற்கையை புரிந்துக் கொள்ளவும், இயற்கையை நேசித்து வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும், தமது சுற்றத்தின் மீது அன்பு கொள்ளவுமான ஒரு பரந்த பார்வையை குழந்தைகளுக்கு கற்றுத் தரும் என்பதே இந்நூலின் சிறப்பு. எனவே பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல, குழந்தைகளுக்கு வீட்டில் சொல்லித் தரவும் ஏற்ற நூல். சிறிய நூலானாலும் கீர்த்தியில் குறைவற்ற இந்நூலிற்கு அணிந்துரை எழுதுவதில் பெருமை கொள்கிறேன்.

இந்நூலைக் கண்டுபிடித்து, அதை இன்றையத் தலைமுறைக்குக் கொண்டுவந்துச் சேர்க்க பெரும் முயற்சியெடுத்து உழைத்துள்ள பாலாஜி அவர்கள் பாராட்டுக்குரியவர். மேலும், தலித் வரலாற்று ஆய்வில் சிகரங்களைத் தொடவும், சாதிகளற்ற சமத்துவ சமூதாயம் படைக்க அவரது முயற்சிகள் துணை நிற்கும். எனவே பாலாஜி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி

**05.01.2013, சென்னை.**

ரோஜா முத்தையா நூலகம் : 33801

**KINDERGARTEN ROOM**

(Nursery Rhymes and Jingles, Kindergarten Games, Action, Marching, Kollattam and Kummi songs and Riddles.)

TAMIL

BY

**Rao Bahadur M.C. RAJAH,** M.L.A., F.M.U.

Formerly Superintendent, Wesley College Lower School

AND

**Sreemathi R. RANGANAYAKI AMMAL**

Hony. Superintendent, A.D.C . School, Madras

(Third Edition – Revised and Enlarged)

THE INDIAN PUBLISHING HOUSE, LTD

1930

Rights Reserved [Price As. 8

Tamil Heritage Foundation

PRINTED

PENROSE & CO., G.T., MADRAS.

1930

# KINDERGARTEN ROOM

(Nursery Rhymes and Jingles, Kindergarten Games, Action, Marching, Kollattam and Kummi songs and Riddles.)

TAMIL

BY

Rao Bahadur M.C. RAJAH, M.L.A., F.M.U.

Formerly Superintendent, Wesley College Lower School

AND

Sreemathi R. RANGANAYAKI AMMAL

Hony. Superintendent, A.D.C . School, Madras

(Third Edition – Revised and Enlarged)

THE INDIAN PUBLISHING HOUSE, LTD

1930

## பொருளடக்கம்

**PAGE**


1. கைகளைவீசுதல் ... 5
2. நிலாவை அழைத்தல் 6
3. விரலாட்டம் 6
4. நிலாச் சோறு சமைத்தல் 6
5. நிலாவோடு வார்த்தை ஆடிக் காண்பித்தல் 7
6. சாய்ந்தாடல் 7
7. கட்டிய கையை வாங்குதல் 8
8. கண்களை மூடி ஆடுதல் 8
9. மழையை வரவழைத்தல் 9
10. ஏழாம் காய் ஆட்டம் 9
11. நான்கு மூலைகளிலும் நின்று சுற்றி விளையாடுதல் 9
12. புட்டம் தட்டி ஆடுதல் 10
13. அத்தை மகனை ஏசல் 10
14. உல்லாச வழிநடை வார்த்தைகள் 10
15. சிற்றுண்டி உண்ணல் 11
16. தோட்ட விளையாடல் 11
17. தலை பிடித்தாட்டல் 12
18. சொல் பழக்கம் கற்பிக்கும் பாடல் 12
19. உள்ளங்கையில் நெல்லுக்குற்றிக்காட்டும் பாடல் 12
20. பராக்குக் காட்டல் 12
21. தாலாட்டு 13
22. புல்லும் காகமும் 17
23. காகத்தோடு வார்த்தை ஆடல் 18
24. கிளிப் பாடல் 19
25. கொக்குப் பாட்டு 20
26. பனைமரப் பாட்டு 20

27. என்ன செய்தாய் 22

28. கை எங்கே 22

29. ஈயும் குதிரையும் 23

30. வட்டம் சுற்றி ஆடுதல் 27

31. காலாலுதைப் பந்தாட்டம் 27

32. தவளை ஆட்டம் 27

33. மோதிர மாட்டம் 28

34. நடைப் பாட்டு 28

35. கோலாட்டம் 29

36. கும்மி 30

37. விடுகதைகள் 31

38. ராஜ வாழ்த்து 32

## கிண்டர் கார்டன் பாடல்கள்

### 1. கைகளை வீசுதல்

கைவீசம்மா! கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு ;
அப்பம் வாங்கலாம் கை வீசு
அமர்ந்து திண்ணலாம் கை வீசு ;
மிட்டாய் வாங்கலாம் கை வீசு
மெதுவாய் தின்னலாம் கை வீசு ;
பழங்கள் வாங்கலாம் கை வீசு
பரிந்து புசிக்கலாம் கை வீசு ;
சொக்காய் வாங்கலாம் கை வீசு
சொகுசாய்ப் போடலாம் கை வீசு ;
கம்மல் வாங்கலாம் கை வீசு
காதில் அணியலாம் கை வீசு ;
கோவிலுக்குப் போகலாம் கை வீசு
கும்பிட்டு வரலாம் கை வீசு;
பள்ளிக்குப் போகலாம் கை வீசு
படித்து வரலாம் கை வீசு.

### 2. நிலாவை அழைத்தல்

நிலா ! நிலா ! வா வா,
நில்லாமல் ஓடிவா,
மலைமேல் ஏறிவா,
மல்லிகைப்பூ கொண்டுவா.

3. **விரலாட்டம்**

சின்ன சின்ன கை
சிங்காரக் கை
ஓமக் கை
ஒன்பது கை
பத்துக் கை.

4. **நிலாச் சோறு சமைத்தல்**

அரிசியைக் குற்று முன்னெ
அரித்துக் கழுவு பின்னே ;
உலையில் அரிசி போடு
உடனே மேலே மூடு ;
கொதித்து வெந்தபின் வடித்து
கொட்டி ஆற்றி எடுத்து ;
கத்திரிக்காயை அரித்து
காரம் புளிப்புத் தெளித்து,
உப்பும் காயமும் போட்டு
ஒத்தி ருக்க்க் கூட்டு ;
வெந்த பின்னே தாளித்து
விரித்த இலையில் படைத்து,
யாவரும்கூடிப் புசிப்போம் ;
இன்பமாக வசிப்போம்.

5. **நிலாவோடு வார்த்தை ஆடிக் காண்பித்தல்**

நிலா ! நிலா ! எங்கே போறாய் ?
மலையாங் குளத்துக்கு மண்ணெடுக்கப் போகிறேன்.
மண் என்னத்திற்கு?
சொப்புப் பண்ண.
சொப் பென்னத்திற்கு?

பணம் போட.
பணம் என்னத்திற்கு?
மாடு வாங்க.
மாடென்னத்திற்கு?
சாணம் போட.
சாணம் என்னத்திற்கு?
வீடு மெழுக.
வீடென்னத்திற்கு?
பிள்ளை பெற.
பிள்ளை என்னத்திற்கு?
ஓலைப் பாயிலே ஓடி விளையாட,
ஈச்சம் பாயிலே இருந்து விளையாட,
பிரப்பம் பாயிலே புரண்டு விளையாட,
கோரைப்பாயிலே குதித்து விளையாட,
தாழம் பாயிலே தவழ்ந்து விளையாட.

**6. சாய்ந்தாடல்**

சாய்ந்தா டம்மா ! சாய்ந்தாடு
தாமரைப் பூவே ! சாய்ந்தாடு ;
குத்து விளக்கே ! சாய்ந்தாடு
கோவில் புறாவே ! சாய்ந்தாடு ;
பச்சைக் கிளியே ! சாய்ந்தாடு
பவழக்கொடியே ! சாய்ந்தாடு ;
சோலைக் குயிலே ! சாய்ந்தாடு
சுந்தர மயிலே ! சாய்ந்தாடு ;
கண்ணே ! மணியே ! சாய்ந்தாடு
கற்பகக் கொடியே ! சாய்ந்தாடு ;
கட்டிக் கரும்பே ! சாய்ந்தாடு
கனியே பாலே ! சாய்ந்தாடு.

## 7. கட்டிய கையை வாங்குதல்

இவ்வளவு வேண்டுமா பாகற்காய் ?
அதுவும் வேண்டாம் பீர்க்கங்காய்.
இவ்வளவு வேண்டுமா பீர்க்கங்காய் ?
அதுவும் வேண்டாம் கத்தரிக்காய்.
இவ்வளவு வேண்டுமா கத்தரிக்காய் ?
அதுவும் வேண்டாம் வாழைக்காய்.
இவ்வளவு வேண்டுமா வாழைக்காய் ?
அதுவும் வேண்டாம் முருங்கக்காய்.

## 8. கண்களை மூடி ஆடுதல்

உங்களம்மாள் என்னென்ன போட்டாள் ?
பாலும் சோறும் போட்டாள்.
ஈ விழுந்ததா ? எறும்பு விழுந்ததா ?
எறும்பு விழுந்தது.
எடுத்து விட்டுக் குடித்தாயா ? சும்மா குடித்தாயா ?
சும்மா குடித்தேன்.
உனக்கொரு காயும், எனக்கொரு பழமும்
தேடிக் கொண்டு வா ?
காயே வா, பழமே வா,
காஞ்சீ புரத்து நெல்லே வா !

Tamil Heritage Foundation

## 9. மழையை வரவழைத்தல்

கொட்டைப்பாக்கு நறுக்கித் தருவேன்
கோவில் மண்ணைத் தெள்ளித்தருவேன்
மழைவா ! வெய்யில்போ !

ஜோர் மழைவா !

### 10. ஏழாம்காய் ஆட்டம்

1ம்-காய். ஆலைப்பொறுக்கி - ஆசாரக்கள்ளி
தூக்கம் தெளிந்த – தூவாடைக் காரி
பாக்கு மரத்துக்குப் – பாவாடைக் காரி. (1)
2ம்-காய். வீறி இரண்டெடுக்க – வீசம் தண்டெடுக்க
மாதா மண்ணெடுக்க. (2)
3ம்-காய். முக்கோடு, தக்கோடு – மூன்றாம் பரிக்கோடு. (3)
4ம்-காய். நான்கு நடலம் – தேங்கு படலம் (4)
5ம்-காய். ஐந்து களாக்காய் – குச்சி மிளகாய். (5)
6ம்-காய். ஆக்கோரளி வாழை – அண்ணன் தம்பி
பெருவாழை. (6)
7ம்-காய். ஏழண்ணன் காட்டிலே – எங்களண்ணன்
வீட்டிலே – மஞ்சல் சரட்டிலே. (7)
பொதை பொதை பம்பரம், செட்டி சிதம்பரம்,
கொங்கு கோலாட்டம்.

### 11. நான்கு மூலைகளிலும் நின்று சுற்றி விளையாடல்

காயே கடப்பங்காய்,
காஞ்சீ புரத்துக் கத்தரிக்காய் ;
உப்பே ஊறுகாய்,
ஊறப்போட்ட நெல்லிக்காய்.

### 12. புட்டம் தட்டி ஆடுதல்

ஒருபுட்டம் திருப்புட்டம் – ஓடிவா மங்களம்
பருப்பும் சோறாம் – பன்னிரண்டு வகையாம்

செக்கைத் திருப்பி – செவ்வெண்ணை வார்த்து
மாடும் கன்றும் வரும்போது மஞ்சள் தண்ணீர் குளிக்கும்போது
காலை மடக்கம்மா கனகம்மா.

### 13. அத்தை மகனை ஏசல்

பூ, பூ, புளியாம்பூ !
பொன்னத்தான் கொண்டைக்குத் தாழம்பூ
அத்தை மகன் வாசலிலே
    அதோ நிற்கிறான் பாருங்கள்,
மீசையின் முறுக்கைப் பார்
    மேலே சரிகை குட்டையைப் பார்,
சொக்காயின் சொகுசைப் பார்
    தோவத்தியின் மினுக்கைப் பார்,
கையில் குடையின் ஒழுங்கைப் பார்
    கடியாரத்தின் கொலுசைப் பார்,
இங்கே வந்த காரியம்
    என்னவென்று கேளுங்கள்.

### 14. உல்லாச வழிநடை வார்த்தைகள்

| | |
|---|---|
| நீ எங்கே போனாய் ? | ஊருக்குப் போனேன் |
| எந்த ஊர் ? | மயிலாப்பூர் |
| என்ன மயில் ? | காட்டு மயில் |
| என்ன காடு ? | ஆற்காடு |
| என்ன ஆறு ? | பாலாறு |
| என்ன பால் ? | கள்ளிப்பால் |
| என்ன கள்ளி ? | இலைக்கள்ளி |
| என்ன இலை ? | வாழை இலை |
| என்ன வாழை ? | கற்பூர வாழை |

| | |
|---|---|
| என்ன கற்பூரம் ? | ரச கற்பூரம் |
| என்ன ரசம் ? | மிளகு ரசம் |
| என்ன மிளகு ? | வால் மிளகு |
| என்ன வால் ? | நாய் வால் |
| என்ன நாய் ? | மர நாய் |
| என்ன மரம் ? | பலா மரம் |
| என்ன பலா ? | வேர்ப் பலா |
| என்ன வேர் ? | வெட்டி வேர் |
| என்ன வெட்டி ? | பனை வெட்டி |
| என்ன பனை ? | தாளிப் பனை |
| என்ன தாளி ? | விருந்தாளி |
| என்ன விருந்து ? | மண விருந்து |
| என்ன மணம் ? | பூ மணம் |
| என்ன பூ ? | மாம் பூ |
| என்ன மா ? | அம்மா. |

### 15. சிற்றுண்டி உண்ணல்

மண்ணடியில் விற்கும் லட்டு
வாங்கி மடியில் கட்டு,
எடுத்துக் கொஞ்சம் பிட்டு
எனக்கே முன்னே இட்டு,
உண்டு விடு ஏப்பம்
ஓடு கொஞ்சம் பார்ப்போம்.

### 16. தோட்ட விளையாடல்

புங்கமிலை, புளியமிலை, எங்கிருக்கிறது?
பொன்னப்பன் தோட்டத்தில் மிகுத்திருக்கிறது ;
அப்பா ! வாரேன் அவ்விட்த்தில் பூச்சி இருக்கிறது

பூச்சிக்கு என்கையில் மருந்து இருக்கிறது.

### 17. தலை பிடித்தாட்டல்

சின்னீ ! தலை நொந்ததே
சின்னக்கா ! தலை நொந்ததே
பாப்பா ! தலை நொந்ததே
பாப்பக்கா ! தலை நொந்ததே

### 18. சொல் பழக்கம் கற்பிக்கும் பாடல்

கும்பகோணமே கோணம்
குறவன் நட்டதே சோளம்,
ஸ்ரீ ராமர் விட்டதே பாணம்
அது எங்கோ போனதோ காணம்.

### 19. உள்ளங்கையில் நெல்லுக்குற்றிக் காட்டும் பாடல்

அகத்திக் கீரை பிண்ணாக்கு
அதிலே கொஞ்சம் நெய்வாரு,
பிஞ்சி கத்திரிக் காய்பொரியல்
பின்னும் கொஞ்சம் நெய்வாரு.

### 20. பராக்குக் காட்டல்

காக்கா ! கண்ணுக்கு மை கொண்டுவா ?
குருவீ ! கொண்டைக்குப் பூ கொண்டுவா ?
கொக்கே ! குழைந்தைக்குத் தேன் கொண்டுவா !
கிளியே ! கிண்ணத்தில் பால் கொண்டுவா !

அப்பா ! முன்னே வாருங்கள்,
அழாதே சொல்லுங்கள்.

## 21. தாலாட்டு

1
ஆராரோ ஆரரிரோ, ஆராரோ ஆரரிரோ ;
முத்தே பவழமே
        முக்கனியே சர்க்கரையே,
கொத்து மருக்கொழுந்தே
        கோமளமே கண்வளராய்.                (ஆராரோ)

பொன்னே நவமணியே
        பூங்கொடியே பூஷணமே,
அன்னமே எம்முடைய
        ஆசையே கண்வளராய்.        (ஆராரோ)

கற்கண்டே பாகே
        கனிரசமே செங்கரும்பே,
கற்பகமே என்னுடைய
        கண்மணியே கண்வளராய்.             (ஆராரோ)

ஆராரோ ஆராரோ, ஆராரோ ஆராரோ ;
சீரார் பசுங்கிளியே
        தெவிட்டாத செந்தேனே,
பேரார் குலக்கொழுந்தே
        பெருமானே ஆராரோ,                        (ஆராரோ)

மாணிக்கக் கால் நாட்டி
வஜ்ரவடம் பூட்டி,
ஆணிப் பொன் தொட்டிலிட்டேன்
அருமருந்தே கண்வளராய். (ஆராரோ)

மானே மரகதமே
மல்லிகையே சண்பகமே,
தேனே பசுங் கிளியே
செல்வமே கண்வளராய். (ஆராரோ)

3
இராகம் – நீலாம்பரி ; தாளம் – ஏகம்
ஆறிரண்டும் காவேரி
அதன் நடுவே சீரங்கம்
*சுவாமி இரண்டு கையினாலே
தந்த என் திரவியமோ !

பச்சை இலுப்பை வெட்டி
பால்வடியத் தொட்டிலிட்டு
தொட்டிலிட்ட அம்மானே நீ
பட்டினியாய் போகாதே.

ஆராரோ ஆராரோ
என்னரசே ஆராரோ
சீராரும் எங்கள் குல
தீபமே நீ ஆராரோ.

கங்கைபுனை ஸ்ரீநாதன்
கருணையினால் என்வயிற்றில்

மங்களமாய் வந்துதித்த
மணியே நீ கண்வளராய்.

பாலே பழரசமே
பகர வொண்ணாத் தெள்ளமுதே
மேலே விண்ணோர் மகிழ
வித்தே நீ கண்வளராய்.

வேதமனு நூற்கலைகள்
விளங்கிவரும் இந்நாட்டில்
கீதமொழி கேட்கவந்த
கிளியே நீ துயில் கொள்வாய்.

வண்ண மணித் தொட்டிலிலே
வாய்த்த செம்பொற் கட்டிலிலே
கண்ணே என் கண்மணியே
கற்பகமே நித்திரை செய்.

தண்டைமணி சத்தமிட
தாய்மார்கள் முத்தமிட
தொண்டையுடன் வாய்மூடித்
துரைமகனே கண்வளராய்.

அத்தைமனம் நோகாமல் உன்
அண்ணன் மனம் வேகாமல்
சித்தமதில் தயை கொண்டு
சிகாமணியே கண்ணுறங்காய்.

தாய்மார்கள் வைதாரோ
தாதியர் என் செய்தாரோ

வாய்திறந்து சொல்லி எங்கள்
மன்னவனே கண்வளர்வாய்

அத்தை அடித்தாளோ
அக்காள் (தான்) அடித்தாளோ
முத்தான வாய் திறந்து
மொழிந்துறங்காய் கண்மணியே.

தங்கத்தால் யானைகளும்
தந்தத்தால் சேனைகளும்
அந்தமாக நான் கொடுப்பேன்
புத்திரனே கண்வளராய்.

பொற்சரிகை வஸ்திரமும்
போற்று பல சித்திரமும்
நற்சரிகை அங்கியுமே
நான் தருவேன் கண்வளராய்.

பஞ்சவர்ணக்கிளிகொஞ்ச
பாடும் குயில் ஓசைமிஞ்ச
எஞ்சலில்லாப் பஞ்சணைமேல்
என்மகனே கண்வளராய்

தந்தையொரு பக்கம் நிற்க
தாயுமொரு பக்கம் நிற்க
சிந்தை மகிழ்விற் பார்க்கும்
தெருட்கடலே கண்வளராய்

சரியாய் தவம் தானம்
தருமங்கள் செய்த எங்கள்

கலிதீர்க்க வந்துதித்த
காதலனே கண்வளராய்

இளயோருடன் தெருவில்
இன்பமாய்த் தேருருட்டி
விளையாடி வந்து நின்ற
வேலவனே கண்வளராய்

மதுரையிலே குதிரைகட்டி
மாந்தோப்பு விடுதிவிட்டு
சடுதியிலே வந்திறங்கும்
என் செல்வமகன் பால் குடமோ.

அடித்தாரைச் சொல்லி யழு
ஆக்கினைகள் பண்ணி வைப்போம்
தொட்டாரைச் சொல்லி யழு
தண்டனைகள் பண்ணிவைப் போம்.

ஆதலாற் கண்மணியே
அழகுமிகும் விண் மணியே
நீதியொடு நற்குணமும்
நீ பெரிதா யெண்ணி நிற்பாய்.

இணையில்லா இவ்வுயிர்தான்
இவ்வுடலை விட்டாலும்
குணமே பெரிய தென்று
கொண்டு நீ வாழ்ந்திடுவாய்.

### 22. புல்லும் காகமும்

புல்லே ! புல்லே ! ஏன் மறைத்தாய் ?

மாடு வந்து மேயவில்லை

ஏன் மாடே மேயவில்லை ?

பையன் என்னை ஓட்ட வில்லை.

ஏன் பையா ஓட்டவில்லை ?

அம்மா கஞ்சி வார்க்க வில்லை.

ஏன் அம்மா வார்க்க வில்லை ?

குழந்தை அழுததாலே.

ஏன் குழந்தாய் நீ அழுதாய் ?

எறும்பு என்னைக் கடித்த்தாலே.

ஏன் எறும்பே நீ கடித்தாய் ?

புற்றிலே கைவிட்டால் நான் சும்மா இருப்பேனா

கடித்தேன் நறுக், நறுக்கென்று.

**23. காகத்தோடு வார்த்தை ஆடல்**

காக்கா ! காக்கா ! எங்கே போனாய் ?

இரைமேயப் போனேன்.

இரை என்ன எடுத்தாய் ?

வைக்கோ லெடுத்தேன்.

வைக்கோலை என்ன செய்தாய் ?

மாட்டுக்குப் போட்டேன்.

மாடு என்ன கொடுத்தது ?

சாணி கொடுத்தது.

சாணியை என்ன செய்தாய் ?

வறட்டி தட்டினேன்.

வறட்டியை என்ன செய்தாய் ?

குயவனுக்குக் கொடுத்தேன்.

குயவன் என்ன கொடுத்தான் ?

தோண்டி கொடுத்தான்

தோண்டியை என்ன செய்தாய்?

கிணற்றில் போட்டேன்.

கிணறு என்ன கொடுத்தது?

தண்ணீர் கொடுத்தது.

தண்ணீரை என்ன செய்தாய் ?

பூஞ்செடிக்கு மாஞ்செடிக்கு வார்த்தேன்.

பூஞ்செடி மாஞ்செடி என்ன கொடுத்தது ?

பூஞ்செடி பூவும் மாஞ்செடி பழமும் கொடுத்தன.

## 24. கிளிப் பாடல்

அரச மரத்துக் கிளி
ஆசாரம் பேசும் கிளி
பாலன் வடி வேலன் கிளி
பாடுது பார் ஆடுது பார்,
எல்லோரும் வாருங்களே பாருங்களே.

புன்னை மரத்துக் கிளி
புதுமை மெத்தப் பேசும் கிளி
மாணிக்கம் வளர்த்த கிளி,
மாண்பாகப் பேசுது பார்,
எல்லோரும் வாருங்களே பாருங்களே.

பாக்கு மரத்துக் கிளி
பதங்கள் மெத்தப் பாடுங்கிளி
மரகதம் வளர்த்த கிளி,
மகிழ்வாக ஆடுது பார்
எல்லோரும் வாருங்களே பாருங்களே.

நந்த வனத்துக் கிளி

நாகரீகம் பேசுங் கிளி
நடராஜன் வளர்த்த கிளி
நலமுடனே பாடுது பார்,
எல்லோரும் வாருங்களே பாருங்களே.

பூங்கா வனத்துக் கிளி
புலவர்போலப் பேசுங் கிளி
பாங்காய் வளர்த்த கிளி
பாடுது பார் ஆடுது பார்,
எல்லோரும் வாருங்களே பாருங்களே.

### 25. கொக்குப் பாட்டு

கொக்கு கொக்கு பூ போடு
கோவில் புறாவே பூ போடு
எங்கள் வீட்டில் பூ போடு
தட்டான் வீட்டில் கல் போடு.

### 26. பனைமரப் பாட்டு

பனைமரமே ! பனைமரமே !
ஏன் வளர்ந்தாய் பனைமரமே !
நான் வளர்ந்த காரியத்தை
நாட்டாரே ! சொல்லுகிறேன்
பாரா முகமாய் இருக்மல்
பட்சமுடன் கேட்டிருங்கள்.
படுக்கப் பாய் நானாவேன்
பாய் முடையத் தோப்பாவேன்,
வெட்ட நல்ல விறகாவேன்
வீடு கட்ட வாரையாவேன்,
கட்ட நல்ல கயிறாவேன்
கன்று கட்டத் தும்பாவேன்,
வார வட்டை நானாவேன்

வரிச்சல்களும் தானாவேன்,
பலத்தசுமை சால்களுக்குப்
புரிமனையும் தானாவேன்,
நனைந்து வருவார்க்கு
சம்பங்குடை நானாவேன்,
பசித்து வருவார்க்குப்
பனம்பழமும் நான்தருவேன்,
களைத்து வருவார்க்குக்
கள்ளமுதம் நான் தருவேன்,
பாலர் பெரியோர்க்குப்
பதனிமிக நான் தருவேன்,
சித்திரக் கோடையிலே
சிறந்த நல்ல நுங்காவேன்,
காளையர்க்கும் கன்னியர்க்கும்
களைதீர்க்கும் விறியாவேன்,
ஓதுகின்ற பிள்ளைகட்கும்
எழுத்தாணிக் கூடாவேன்,
அரிச்சுவடி என்னாலே
வருக்கபாடம் என்னாலே,
எண்சுவடி என்னாலே
குழிமாற்றும் என்னாலே,
வர்த்தகரும் செட்டிகளும்
வழியறிவ தென்னாலே,
கணக்கர்களும் முதலிகளும்
கணக்கறிவ தென்னாலே,
பலசரக்கு மண்டிகளில்
பத்திரமாய் நானிருப்பேன்,
கார்த்திகை மாதத்திலே
கருத்தறிந்த பிள்ளைகட்கு,
திருத்தமுள்ள மாவலியாய்த்
தெருவெங்கும் சுற்றிடுவேன்,
அரண்மனையில் நானிருப்பேன்
ஆஸனத்தில் நானிருப்பேன்,
மச்சுள்ளே நானிருப்பேன்
மாளிகையில் நானிருப்பேன்,

குச்சுள்ளே நானிருப்பேன்
குடிசைக்குள் நானிருப்பேன்,
ஏரிக்கரை மேலே
என்னாளும் வீற்றிருப்பேன்.

### 27. என்ன செய்தாய்

தம்பி ! இந்நேரம் என்ன செய்தாய் ?
புல் பிடுங்கினேன்.
புல்லை என்ன செய்தாய் ?
பசுவுக்குப் பொட்டேன்.
பசு என்ன கொடுத்தது ?
பால் கொடுத்தது.
பாலை என்ன செய்தாய் ?
அம்மா ளிடம் கொடுத்தேன்.
அம்மா என்ன கொடுத்தார் ?
பாயஸம் கொடுத்தார்.
பாயஸத்தை என்ன செய்தாய் ?
பூனைக்குக் கொடுத்தேன்.
பூனை என்ன செய்த்து ?
மியாவ், மியாவ் என்று கத்தினது.

### 28. கை எங்கே

சொட சொடாப் பழம்
கிள்ளாப் பிரண்டை கீப் பிரண்டை
மாப் பிரண்டை மல்லிகை மொட்டே !
உங்கள் அப்பன் தலையில் என்ன பூச்சி ?
(முருக்கம் பூச்சி)
முருக்கம் பூச்சி தின்றவனே !
முந்நாழி எண்ணெய் குடித்தவனே !
காக்கா வாழைப்பழம் தின்றவனே ! கையை மடக்கு.
கை எங்கே காக்கா கொண்டு போயிற்று.
காக்கா எங்கே ? புளிய மரத்திலே.
புளியமரம் எங்கே ? வெட்டி விட்டார்கள்.

வெட்டின கட்டை எங்கே ?

சூளை போட்டு விட்டார்கள்.

சூளை போட்ட சாம்பல் எங்கே ?

பல் தேய்த்து விட்டார்கள்.

பல் தேய்த்த இடம் எங்கே ?

குயவன் மண்ணெடுத்து விட்டான்.

மண்ணை என்ன செய்தான் ?

பானை செய்தான்.

பானையை என்ன பண்ணினாய் ?

பூஞ்செடிக்கும் மாஞ்செடிக்கும் ஜலங்கொட்டினேன்.

பூஞ்செடி என்ன கொடுத்தது ?

பூ கொடுத்தது.

மாஞ்செடி என்ன கொடுத்தது ?

மாம்பழம் கொடுத்தது.

பூவையும், பழத்தையும், என்ன செய்தாய் ?

என் தம்பியும் நானும் பங்கிட்டுக் கொண்டோம்.

**29. ஈயும் குதிரையும்**

Tamil heritage Foundation

ஈ – ஓ கொழுத்த கன்றே ! என் பெயரைச் சொல்லு ?

கன்று – எனக்குத் தெரியாது, என் தாயைக் கேள்.

ஈ – ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! என் பெயரைச் சொல்லு ?

கன்றின் தாய் – எனக்குத் தெரியாது. என்னை மேய்க்கும் இடையனைக் கேள்.

ஈ – ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா !

என் பெயரைச் சொல்லு ?

இடையன் – எனக்குத் தெரியாது, என் கையில் இருக்கும் கோலைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா !

இடையன் கைக்கோலே ! என் பெயரைச் சொல்லு ?

கோல் – எனக்குத் தெரியாது ; நானிருந்த மரத்தைக்கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா ! இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! என் பெயரைச் சொல்லு ?

மரம் – எனக்குத் தெரியாது, என்மேல் குந்தி இருக்கும் கொக்கைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா ! இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! மரத்தில் குந்தி இருக்கும் கொக்கே ! என் பெயரைச் சொல்லு ?

கொக்கு – எனக்குத் தெரியாது ; நான் நீந்தும் குளத்தைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா ! இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! மரத்தில் குந்தி இருக்கும் கொக்கே ! கொக்கு நீந்தும் குளமே ! என் பெயரைச் சொல்லு?

குளம் – எனக்குத் தெரியாது ; குளத்தில் வாழும் மீனைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா ! இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! மரத்தில் குந்தி இருக்கும் கொக்கே ! கொக்கு நீந்தும் குளமே ! குளத்தில் வாழும் மீனே ! என் பெயரைச் சொல்லு?

மீன் – எனக்குத் தெரியாது ; என்னைப் பிடிக்கும் செம்படவனைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா !
இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! மரத்தில் குந்தி
இருக்கும் கொக்கே ! கொக்கு நீந்தும் குளமே ! குளத்தில் வாழும்
மீனே ! மீனைப் பிடிக்கும் செம்படவா ! என் பெயரைச் சொல்லு?

செம்படவன் – எனக்குத் தெரியாது ; என் கையிலிருக்கும் சட்டியைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா !
இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! மரத்தில் குந்தி
இருக்கும் கொக்கே ! கொக்கு நீந்தும் குளமே ! குளத்தில் வாழும்
மீனே ! மீனைப் பிடிக்கும் செம்படவா ! செம்படவன் கையில் இருக்கும்
சட்டியே ! என் பெயரைச் சொல்லு?

சட்டி – எனக்குத் தெரியாது ; என்னைப் பண்ணின குயவனைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா !
இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! மரத்தில் குந்தி
இருக்கும் கொக்கே ! கொக்கு நீந்தும் குளமே ! குளத்தில் வாழும்
மீனே ! மீனைப் பிடிக்கும் செம்படவா ! செம்படவன் கையில் இருக்கும்
சட்டியே ! சட்டி பண்ணும் குயவா ! என் பெயரைச் சொல்லு?

குயவன் – எனக்குத் தெரியாது ; நான் மண் எடுக்கும் குழியைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா !
இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! மரத்தில் குந்தி
இருக்கும் கொக்கே ! கொக்கு நீந்தும் குளமே ! குளத்தில் வாழும்
மீனே ! மீனைப் பிடிக்கும் செம்படவா ! செம்படவன் கையில் இருக்கும்

சட்டியே ! சட்டி பண்ணும் குயவா ! குயவன் மண் எடுக்கும் குழியே !

என் பெயரைச் சொல்லு?

குழி - எனக்குத் தெரியாது என்மேல் முளைக்கும் புல்லைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா !

இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! மரத்தில் குந்தி

இருக்கும் கொக்கே ! கொக்கு நீந்தும் குளமே ! குளத்தில் வாழும்

மீனே ! மீனைப் பிடிக்கும் செம்படவா ! செம்படவன் கையில் இருக்கும்

சட்டியே ! சட்டி பண்ணும் குயவா ! குயவன் மண் எடுக்கும் குழியே !

குழியின் மேல் முளைக்கும் புல்லே ! என் பெயரைச் சொல்லு?

புல் – எனக்குத் தெரியாது ; என்னை மேயும் குதிரையைக் கேள்.

ஈ - ஓ கொழுத்த கன்றே ! கன்றின் தாயே ! கன்று மேய்க்கும் இடையா !

இடையன் கைக்கோலே ! கோலீன்ற கொடிமரமே ! மரத்தில் குந்தி

இருக்கும் கொக்கே ! கொக்கு நீந்தும் குளமே ! குளத்தில் வாழும்

மீனே ! மீனைப் பிடிக்கும் செம்படவா ! செம்படவன் கையில் இருக்கும்

சட்டியே ! சட்டி பண்ணும் குயவா ! குயவன் மண் எடுக்கும் குழியே !

குழியின் மேல் முளைக்கும் புல்லே ! புல்லை மேயும் குதிரையே !

என் பெயரைச் சொல்லு?

குதிரை – ஈ, ஈ, ஈ, என்று கனைத்தது.

### 30. வட்டம் சுற்றி ஆடுதல்

**“நேநெந்து வெதகுதுரா” என்ற மெட்டு**

எனதன்புள்ள தோழர் தோழிகளே !

வட்டம் சுற்றிப் பாடிக்களிக்கவே

வட்டம் சுற்றிப் பாடிக்களிக்கும்போது

மிக விரைவாய் நின்று போவோம்.

கைகளைத் தட்டி, மனப்பூர்வமாய், மகிழ்ந்திடுவோம்,

வளைந்து வலமிட, சுலபமாய் சுற்றிடுவோம்.

**31. காலாலுதைப் பந்தாட்டம்**

"ஹாரேபஹாரஹ" என்ற மெட்டு

பாலரே நாமெல்லோருமே

காலாலுதைப் பந்துதைத் தாடுவோம் ;

பாடுவோம், ஆடுவோம், நாடுவோம்,

பந்துதையாப் பராமரிக்கையாய்

விடுவோனவன் தோற்றானென

உடனே கைதட்டுவோம்.

**32. தவளை ஆட்டம்**

**"வாலகுங்குரு" என்ற மெட்டு**

சடுதி தடியை எடுத்திடுவோம்

தவளை தன்னை ஓட்டிடவே,

தட தடவென்று விரட்டிட அதுவும்

தியங்குது பார் அது தோழர்களே.

## 33. மோதிர மாட்டம்

**“பட்டுவாகூந்தன” என்ற மெட்டு**

கைகளைப் பின்னால் கட்டிய பின்பு வட்டமாய் உட்காருவோம்

பையவே ஒருவர் எழுந்திருந்து சுற்றியே ஓடிடுவோம்,

அகத்தின் அழகை முகத்தினாலறிய ஆடுவோம் இவ்வாட்டம்

பகுத்துமே சொல்வீர் பாலரே எவரிடம் கொடுத்தேன் மோதிரத்தை.

## 34. நடைப்பாட்டு

**இங்கிலீஷ் நோட்**

1

கைகள் பின் கட்டிக் கால் சேர்த்து நிற்பீர்

மார்ச் என்று கேட்டுடன் மகிழ்வதாய் நடப்பீர்

கவனமாய் இடதுகால் முன்வைப்பீர்

பதியப்பின் வலது கால் வை, வை, வை.

பக்கம் பாராதெனைத் தொடர்வீர்

பாலரே பாரினில் புகழ் அடைவீர்.

2

நேசரும் நேசியரும் ஒயிலாய்ச் செல்லவே

நேசரும் நேசியரும் உரத்திப்பாடியே

நேசரும் நேசியரும் ஒழுங்காய்க் கூடியே

வகுப்புக் கேகுவோம் வாரீர்.

3

**“ஐமௌலேகுத்” என்ற மெட்டு**

வன்னமதான வகுப்பேகத் தோழரே ! வரிசையாய் வாரீர் ;

ஆனந்தமாய் அப்யாசங்கள் செய்யப் பலஉள

சுற்றிடுவோம், பலனுற்றிடுவோம். (வன்னமதான)

4

**“பட்டுவாகூந்தன” என்ற மெட்டு**

தோழரேவாரீர் தோழிகள் வாரீர் சுந்தரமாய்த் தொடர்ந்து,

தாழவே பின்னால் கைகளைக் கட்டி வரிசையாய் நடப்போம்.

இடது காலதை முன் தூக்கி வைத்து

இணைபிரியாமல் எல்லோரும் சேர்ந்து

இசையாய்ப் பாடியே தோழரே நாமும்

வரிசையாய் நடப்போம்.

வட்டமாய் நமது வகுப்பினில் நின்று

கைகளைத் தான் கோத்துத்,

திட்டமாய் நமது வாத்தியாயருக்கு

வந்தனம் செய்வோமே.

**35. கோலாட்டம்**

**“தோஜோரு வாலா” என்ற மெட்டு**

**பல்லவி**

சீருடன் கோலடிப்போமே, கோலடிப் பொமே நாம்.

**அநுபல்லவி**

பேருடனே ஒருங்கு கூடிப் ப்சகில்லாமலே

ஞானபதம் களிப்பாய் பாடியே

வேணும் வரம் தன்னை நாடியே (சீருடன்)

**சரணம்**

ஆர்ப்பரியாமலே ஆனந்தமாகவே

அனைவரும் ஒரு புறமதாக அழகாய் வட்டமிட்டு. (சீருடன்)

**"நாத நார் வாரீர்" என்ற மெட்டு**

தோழிகள் வாரீர் சீராகவே நாமெல்லாம்

சூழ்ந்து கோலாடிக் களிப்போம்.

மாழை மல்லி ஞானபரன், வாழ்வடியை ஓர் மன தாய்,

எண்ணிப் பதம், கண்ணியமாய், பாடி இனிது கூடி (தோழி)

நல்லொழுக்கம் தாழ்மை குணம், நாகரீகம் ஞான அன்பு,

நாடியவும், கூடியவும், பாடி இனிது கூடி (தோழி)

பள்ளியில் நாம் கற்கும் கல்வி, பாக்கியமாய் நாமதனை,

பற்றுவகை, தோன்றிடப் பண், பாடி இனிது கூடி (தோழி)

**36. கும்மி**

**"மூச்சுக்குரா" என்ற மெட்டு**

**பல்லவி**

பெண்களா கூடி நாம் கும்மி அடிப்போம் ;

**அநுபல்லவி**

பெருமையாய் நமது மேய்ப் பரனடி போற்றி, (பெண்)

**சரணங்கள்**

சுத்த மதி விளக்கிச் சுகவாழ் விற்றுலங்க

சத்திய மிகுந்த உத்தமனடி போற்றி (பெண்)

2

மெய்யன்பு துதித்துக் கல்வி மென்மேலும் பெருக

துய்யநின் திருவருள் சூழடிப் போற்றி (பெண்)

## 37. விடுகதைகள்

1. ஜாடி மேலே குரங்கு - முந்திரிப்பழம்
2. சொம்பு நிறைய கெம்பு - மாதுளம்பழம்
3. காட்டிலே துளி இரத்தம் - குண்டுமணி (குன்றி மணி)
4. ஊருக்கெல்லாம் ஒரே கல் - உப்பு
5. ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டி - ஆகாயம்
6. கிணற்றைச் சுற்றிப் புல் - கண் இரப்பை
7. ஏறாத மரத்திலே எண்ணாயிரங்காய் - கேழ்வரகு
8. கொக்கு நிற்க குளம் வற்ற வற்ற - விளக்கு
9. ஒரு புட்டியில் இரண்டு தைலம் - முட்டை
10. அந்தரத்தில் பறந்திடும் பருந்தல்ல,
    அழகான வாலுண்டு அனுமானல்ல,
    விந்தையுடன் கட்டுண்ணுங் கட்டுமல்ல,
    வேந்தரது திருநாமம் அவர்க்கே உண்டு - காற்றாடி
11. போவான் வருவான் திம்மப்பன்
    ஒருகாலில் நிற்பான் திம்மப்பன் - கதவு
12. ஆயாள் வீட்டு தோட்டத்திலே
    பச்சைப் பாம்பு தொங்குகிறது - புடலங்காய்

**38. ராஜவாழ்த்து**

கர்த்தாவே ! ராஜனை,

எங்கள் நல்வேந்தனை

காத்தருள் புரிவீர்.

வெற்றி கெம்பீரமும்,
கீர்த்தி ப்ரதாபமும்,

தீர்க்காயுள் ஆட்சியும்,

தந்தருள்வீர்.

முற்றிற்று.